# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • அக்டோபர் 26, 2024

Weekly E-paper • October 26, 2024





# பல்கலைக் கழகமா? பல்காவிக் கழகமா?

சுப. வீரபாண்டியன்

## இயக்கச் செய்திகள்

## தில்லைவாழ் தீட்சிதர்கள் கொள்ளையோ கொள்ளை!

தலையங்கம்

## ஏன் தீபாவளியைப் புறக்கணிக்க வேண்டும்?

உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 • அக்டோபர் 26, 2024 Weekly E-paper • October 26, 2024


# பல்கலைக் கழகமா? பல்காவிக் கழகமா?

சுப. வீரபாண்டியன்

ஆங்கிலேயர்கள் காலத்தில் பல்கலைக்கழகங்களுக்கான வேந்தராக ஆளுநர் நியமிக்கப்பட்டார். ஆளுநர் என்பதே ஓர் அலங்காரப் பதவி. அதிலும் பல்கலைக்கழக வேந்தர் என்பது எந்த அதிகாரமும் அற்ற பதவி! ஆனால் இன்று அதை வைத்துக் கொண்டு, ஆளுநர் தமிழ்நாட்டில் கல்விக்கூடங்களைக் கவனமாகச் சிதைத்துக் கொண்டிருக்கிறார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் அதிகாரம் உடையது என்றும், அரசின் வழியில்தான் ஆளுநர் செயல்பட வேண்டும் என்றும் நீதிமன்றங்கள் திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டன. ஆனாலும் தமிழ்நாட்டில் ஆளுநராக இருக்கும் ஆர் எஸ் எஸ் ரவி திருந்துவதாக இல்லை.




அந்தப் பதவியை பயன்படுத்திக் கொண்டு தன்னால் என்னென்ன செய்ய முடியுமோ அவை அனைத்தையும் அவர் செய்து கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டில் ஒரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் மீது குற்றவியல் சட்டங்களின் கீழ் வழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர் இன்னும் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பதற்கு, ஆளுநர் துணை புரிகின்றார். சென்னைப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட தொன்மையான, புகழ் வாய்ந்த பல்கலைக்கழகங்கள் சிலவற்றில், ஆண்டுக் கணக்கில் அப்பதவி நிரப்பப்படாமல் இருக்கிறது. அதை நிரப்புவதற்கும் முட்டுக்கட்டை போடுகின்றவராகவே ஆளுநர் செயல்படுகின்றார்.

இப்போது நெல்லையில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றப் பேரவைக்குக் கவிதா என்பவரை ஆளுநர் நியமித்துள்ளார். அவர் ஆர்எஸ்எஸ் இயக்கத்தைச் சார்ந்தவர் என்பதை எல்லோரும் அறிவர். அப்படி இருக்க அவரை ஒரு பெரும் பொறுப்பில் அமர்த்துவது அடிப்படையிலேயே ஒரு சார்புத் தன்மை உடையதாகவும், முழுக்க முழுக்க அரசியல் செயல்பாடாகவுமே உள்ளது.

ஆளுநரின் இந்தச் செயலைக் கண்டித்து, இன்று அங்கு மாணவர் இயக்கங்கள் போராட்டம் நடத்தி இருக்கின்றன. தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்கள் இதனைக் கண்டித்தும் இருக்கிறார்கள். ஆனாலும் ஆளுநர் தன் பிடிவாதத்தை மாற்றிக் கொள்வதாக இல்லை.

அரசு, நீதிமன்றம், சட்டம் எல்லாவற்றையும் புறக்கணிக்கும் ஆர்எஸ்எஸ் ரவிக்கு இனி மக்கள் இயக்கமே பாடம் கற்பிக்க வேண்டும். நாடு முழுவதும் மக்கள் திரள் போராட்டங்களை ஆளுநருக்கு எதிராக நடத்த வேண்டிய கட்டம் வந்துவிட்டது என்றே தோன்றுகிறது.

இல்லையானால், இவர் தமிழ்நாட்டின் பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் பல் காவிக் கழகங்களாக ஆக்கி விடுவார். •

# சாரல் மாவட்டத்தில் திராவிடத் தென்றல்!











திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவரும், தமிழ்நாடு அரசு சமூகநீதிக் கண்காணிப்புக் குழு தலைவருமான பேராசிரியர் சுப வீரபாண்டியன் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு மூன்று நாள் சுற்றுப்பயனம் மேற்கொண்டார்.

சென்னையிலிருந்து பொதிகை விரைவு ரயிலில் 18.10.2024 அன்று காலை தென்காசி வந்தார் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன்.

19.10.2024 அன்று காலை மேக்கரை மோகன் ரிசார்ட்ஸில் தென்காசி மாவட்டப் பேரவையின் செயல்வீரர்கள் கூட்டம் மாவட்டத் தலைவர் சேக்கிழார் தலைமையில், மாணவர் பேரவை மாநில அமைப்பாளர் நெல்லை பாபு, இளைஞரணி மாநிலச் செயலாளர் இரா.சந்தானம், மாவட்டத் துணைச் செயலாளர் பரசுராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப்பட்ட நிகழ்ச்சியில் பேரவையின் மாவட்டச் செயலாளர் அருள் ஜோதி பாபா வரவேற்புரையாற்றினார்.கூட்டத்தில் மறைந்த முரசொலி செல்வம் அவர்களின் உருவப்படத்திற்கு மலர் தூவி புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப வீரபாண்டியன் அவர்கள் பேரவையின் நோக்கமும் எதிர்காலச் செயல்பாடுகளும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார், துணைப் பொதுச் செயலாளர் இராம. வைரமுத்து அவர்கள் பேரவையைப் பற்றிய அறிமுகவுரை வழங்கினார். மாவட்டப் பொருளாளர் கிப்ட்ஸன் நன்றியுரை வழங்கினார். மாணவர் பேரவை பொறுப்பாளர்கள் டாரிஸ் ஜிந்தகி, ரூபஸ் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினர். நிகழ்ச்சியின் முடிவில் திராவிட முழக்கம் இதழுக்கு தென்காசி மாவட்டப் பேரவை, மாணவர் பேரவை மற்றும் இளைஞரணி சார்பில் 50 சந்தாக்களும் திராவிட நட்புக் கழகத்தின் சார்பில் 25 சந்தாக்களும் பேரவைத் தலைவரிடம் வழங்கப்பட்டது.

அன்று மாலை சாம்பவர்வடகரையில் பேரூர் செயலாளர் கராசி மரைக்காயர் மற்றும் இளைஞரணி துணை அமைப்பாளர் ரபீக் ராஜா தலைமையில் ஊர்பொதுமக்கள் முன்னிலையில், சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாவையொட்டி அமைக்கப்பட்ட கருஞ்சட்டை படிப்பகத்தை பேரா. சுபவீரபாண்டியன் திறந்து வைத்து 100 பேருக்கு தென்னைமரக் கன்றுகளை வழங்கினார்.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## தில்லைவாழ் தீட்சிதர்கள் கொள்ளையோ கொள்ளை!

சிதம்பரம் நடராசர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை தீட்சிதர்கள் விற்பனை செய்ததற்கான சான்றுகள் உள்ளன என்று அண்மையில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது (இந்தி தமிழ்திசை நாளிதழ் செய்தி, நாள்: 25.10.2024).

சிதம்பரம் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் 1974, 1985 மற்றும் 1988ஆம் ஆண்டுகளில் தீட்சிதர்களால் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கோயிலுக்கு நிலம் தானமாகக் கொடுத்தவர்களின் வாரிசுகள் வசமுள்ள 1267.09 ஏக்கர் நிலத்தில் இருந்து கிடைக்கும் வருமானம் கோயிலுக்கும், தர்ம காரியங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், 271.97 ஏக்கர் நிலங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் கோயிலுக்கு செலுத்தப்படுவதில்லை. அதே போல, கோயிலுக்கு வழங்க வேண்டிய தொகையை தீட்சிதர்களிடம் கட்டளைதாரர்கள் அளிக்கின்றனர். அதற்கு முறையான கணக்கு விவரங்கள் இல்லை. சில நாட்களுக்கு முன்பாக வேறொரு வழக்கில், தீட்சிதர்கள் தங்களைக் கடவுளைவிட உயர்வானவர்களாகக் கருதக் கூடாது என்று உயர்நீதிமன்றம் கண்டித்தது. அக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் அவமானப்படுத்தப்படுகிறார்கள். தீட்சிதர்கள் கோயிலுக்குள் கிரிக்கெட் விளையாடிய நகைச்சுவையும் சில நாட்களுக்கு முன்பு நடைபெற்றது. இது போல பல குழப்பங்கள் சிதம்பரம் கோயிலில் நடைபெறுவது தொடர்நிகழ்வாகிவிட்டது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி சிதம்பரம் கோயிலின் நிர்வாகம் பொது தீட்சிதர்கள் என்ற குழுவின் கையில் உள்ளது. இந்த நிலைமையில் அண்மையில் நடைபெற்ற ஒரு தீட்சிதர் இடைநீக்கப் பிரச்சினையிலும், இந்து சமய அறநிலையத்துறை எப்படி தலையிடலாம் என்ற கேள்வியை உயர்நீதிமன்றம் எழுப்பியுள்ளது.

கோயில்கள் மக்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்டவை. அவை அரசால் நிர்வகிக்கப்படுவதே சரியானது. அரசு நிர்வாகத்தின் மூலமாகவே முறையாகத் தணிக்கை நடைபெறும். சான்றாக, அறநிலையத்துறை கையகப்படுத்தும் கோயில்களின் நகைகள் ஆண்டுதோறும் பரிசோதிக்கப்பட்டு தணிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றன. காலத்திற்கும், அந்த நகைகள் பாதுகாக்கப்படுகின்றன. இதன்மூலம் வெளிப்படைத்தன்மை (Transparency) உறுதிப்படுத்தப்படுகின்றது. இதை ஓர் அரசு அமைப்பால் மட்டுமே செய்ய முடியும்.

தில்லை நடராசர் கோயிலைத் தீட்சிதர்களிடமிருந்து மீண்டும் அரசு மீட்டெடுக்க வேண்டும். அப்போது மட்டுமே இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை– 600 024,**
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

அதன் பின்னர் சுரண்டை நகரில் அமைக்கப்பட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கொடியினை திமுக மாவட்டச் செயலாளர் ஜெயபாலன் தலைமையில் நகரச் செயலாளர் கணேசன் , தென்காசி வடக்கு மாவட்ட முன்னாள் செயலாளர் ஆ. துரை பேரவை பொறுப்பாளர்கள் இராம. வைரமுத்து, அருள்ஜோதிபாபா, சேக்கிழார், பரசுராமன், எட்வின், பெப்பின்சன், நெல்லை பாபு, சந்தானம், ரூபஸ், டாரிஸ் ஜிந்தகி, ஷோபனா ராணி , ஜான்சன், ஸ்டுடியோ சரவணன் முன்னிலையில் பேரா. சுபவீரபாண்டியன் அவர்கள் ஏற்றி வைத்து ஊர் பொதுமக்கள் 100 பேருக்கு தென்னைமரக் கன்றுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

அன்று இரவு தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் சுந்தரபாண்டியபுரத்தில் நடைபெற்ற திமுக பவள விழாப்பொதுக்கூட்டத்தில் பேரவையின் தலைவர் பேரா. சுப. வீரபாண்டியன் , துணைப்பொதுச் செயலாளர் இராம. வைரமுத்து , திமுக தலைமைக் கழகப் பேச்சாளர் சைதை சாதிக் ஆகியோர் திராவிட மாடல் அரசின் மூன்றாண்டு சாதனைகளை விளக்கப்பேசினர்.

20.12.2014. அன்று காலை அச்சம்பட்டி பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் சிலைக்கு தோழர்கள் சரவணன் தலைமையில் பாண்டித்துரை, ஜெய்லானி, சந்திரன் மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செய்து அங்குள்ள குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்கி, 1000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் அவர்களும் அவர்தம் இணையர் வசந்தா அம்மா அவர்களும்.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் அனைத்திலும் பேரவையின் பொறுப்பாளர்கள் லெனின் சாமுவேல்,கணேஷ் கண்ணன், முத்து கருப்பன்,முப்புடாதி, சுபாஷ் சந்திரபோஸ், அஸ்வின், கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

3 நாள் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளையும் தென்காசி மாவட்ட பேரவை, மாணவர் பேரவை மற்றும் இளைஞரணி பொறுப்பாளர்கள் மிகச்சிறப்பாக செய்திருந்தனர்.

## பேரவைத் தலைவரின் நிகழ்ச்சிகள்

**27.10.24** – ஞாயிறு மாலை 6:00 மணி – சென்னை, தேனாம்பேட்டை, அன்பகத்தில்
கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் நூல்கள் வெளியீட்டு விழா

**02.11.24** – சனி இரவு 7 மணி – கோவை
திமுக பொதுக்கூட்டம்

# ஏன் தீபாவளியைப் புறக்கணிக்க வேண்டும்?

உதயகுமார்

சுயமரியாதை இயக்கம் தோன்றிய காலம் முதல் தீபாவளி எதிர்ப்பு / புறக்கணிப்பு என்பது தமிழ்ச் சமுதாயத்தில் தொடர்ந்து வருகிறது. தீபாவளி அன்று தீபாவளி எதிர்ப்பு ஊர்வலங்கள் கண்டனக் கூட்டங்கள் திராவிட இயக்கத்தவரால் நடத்தப்பட்ட காலங்கள் உண்டு. தீபாவளி இவ்வளவு பெரிய எதிர்ப்புக்குள்ளாவதற்கான காரணம் அனைவரும் அறிந்ததே. திராவிட இனத்தவரை இழிவுபடுத்த ஏற்படுத்தப்பட்ட அறிவுக்கு ஒவ்வாத, ஆபாசப் பண்டிகையே தீபாவளி ஆகும். இக்கருத்தைப் பல்வேறு அறிஞர்கள் ஆய்வுகளில் நிறுவியிருக்கிறார்கள். மேலும் தீபாவளி சமணப் பண்டிகை என்றும் பவுத்தப் பண்டிகை என்றும் சிலர் சொல்வதுண்டு. எப்படி இருந்தாலும் தீபாவளி என்பது தமிழர்கள் விழாவோ தமிழர்கள் உயர்வுக்கு வழிவகுக்கும் நிகழ்வோ அல்ல. ஆயினும் தீபாவளியைக் கொண்டாடுவதற்கான நியாயங்கள் ஏதோ ஒரு வகையில் நம்முடைய சமூகத்தில் தொடர்ந்து கற்பிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றன.

இன்றைய பரபரப்பான அழுத்தம் நிறைந்த வாழ்க்கை முறையில் தீபாவளி என்பது விடுமுறை நாள் கொண்டாட்டமாகப் பார்க்கப்படுகிறது என்கின்ற கருத்து முன்வைக்கப்படுகிறது. தீபாவளிக்குப் பின்னால் இருக்கும் கதைக்காகவோ புராணங்களுக்காகவோ இன்று மக்கள் தீபாவளியைக் கொண்டாடுவதில்லை என்று சொல்லப்படுகிறது. பண்டிகைகளையும் சடங்குகளையும் கண்மூடிப் பழக்கமாகச் செய்து வந்த சமுதாயத்தில், இந்து மதத்தின் ஒவ்வொரு பண்டிகைக்குப் பின்னாலும் இருக்கக்கூடிய பார்ப்பனர் சூழ்ச்சியையும், பார்ப்பனரல்லாதார் இழிவையும், மூடநம்பிக்கையையும், ஆபாசத்தையும் மக்களுக்குப் பரப்புரை செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தியதே திராவிட இயக்கம்தான். இந்தப் பணியை இந்தியாவிலேயே திராவிட இயக்கம் மட்டும்தான் செய்தது. நாம் காரணத்தை அறியாமல், முன்னோர்கள் சொன்னார்கள், நம்முடைய சம்பிரதாயம் என்று ஏன் எதற்கு எனக் கேள்வி கேட்காமல் தீபாவளி கொண்டாடுவதையே பார்ப்பனர்கள் மிகவும் விரும்புவார்கள். எனவே இந்த நாளில் நம்மைக் கொண்டாட வைக்க வேண்டும் என்பதுதான் பார்ப்பனர்களுடைய நோக்கமாகும். அதனால்தான் துக்ளக் இது போன்ற அட்டைப் படத்தை வெளியிட்டு ஆணவம் கொள்கிறது. சென்ற ஆண்டு தீபாவளியின் போது துக்ளக் வெளியிட்ட இந்த அட்டைப் படமும் அதற்கு விடுதலையின் விளக்கமுமே இதற்குச் சான்றாகும்.

தீபாவளிக் கதைகள் புராணங்கள் மறைந்து போய்விட்டன என்று சொல்லப்படும் வாதத்தில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. வானொலி நிகழ்ச்சிகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் தீபாவளியன்று காலை நரகாசுரன் கொலை செய்யப்பட்ட கதையைச் சொல்லாமல் வேறு எந்தக் கதை சொல்லப்படுகிறது? இந்தச் செய்திகளையெல்லாம் எடுத்துக் கூறி தீபாவளியை நாம் கொண்டாடலாமா என்று மக்களைச் சிந்திக்க வைக்க வேண்டிய கடமை திராவிட இயக்க தோழர்களுக்கு இருக்கிறது.

மேலை நாடுகளில் கிறிஸ்துமஸ் பிரம்மாண்டமாகக் கொண்டாடப் படுகிறது. அதற்கு விடுமுறை நாள்களும் அதிகம். இக்கொண்டாட்டத்தில் எந்த ஒரு இனத்தின் இழிவோ, மறைமுக சூழ்ச்சியோ இல்லை. மத நம்பிக்கையும் மூடநம்பிக்கையும் உண்டு. ஆனாலும் அந்நாட்டு மக்கள் மத நம்பிக்கையின் அல்லது மூடநம்பிக்கையின் அடிப்படையிலான விடுமுறை நாள்களை நாம் எதற்குக் கொண்டாட வேண்டும் என்று சிந்திக்கிறாரகள். புனிதங்கள் இல்லாத விடுமுறை நாள்களை(Holi-days without holiness) உருவாக்க அவர்கள் முயல்கிறார்கள். நாம் ஆரிய சூழ்ச்சி இன இழிவு மூடநம்பிக்கை ஆபாசம் என எத்தனையோ காரணங்கள் இருப்பினும் தீபாவளியை விடுமுறை நாளாக எண்ணி கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். மேலை நாடுகளிலாவது மதங்களுக்கு அப்பாற்பட்ட விடுமுறை நாள்களை இனிதான் உருவாக்க வேண்டும். ஆனால் நாம் கொண்டாடித் தீர்க்க, இன மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட தமிழர் திருநாளாம் பொங்கல் இருக்கிறது.

தீபாவளி எதிர்ப்பை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய திராவிட இயக்கத் தோழர்களே இன்று பெரும்பாலும் விடுமுறை நாள் கொண்டாட்டத்தில் கரைந்து விடுகிறார்கள். வீட்டில் புலால் உணவு சமைக்கிறார்கள், பலகாரங்கள் செய்கிறார்கள். வீட்டில் கொண்டாடும்போது நாம் எப்படி தவிர்ப்பது என்று சிலர் கேட்கிறார்கள். முதலில் வீட்டில் கொண்டாட்டத்தைத் தடுப்பதற்கு நாம் முயற்சிப்பதேயில்லை. நாம் முயன்றும் நடைபெறாவிட்டால் பரவாயில்லை. ஏனெனில் நாம் ஜனநாயகவாதிகள். ஆனால் நாம் கொண்டாட்டத்தைப் புறக்கணிக்கலாம். கடவுள் நம்பிக்கை உடையவர்கள் விரதம் இருக்கும் போதும் அல்லது ஒரு சில கிழமைகளில் புலால் உணவு சாப்பிடாமல் கடைபிடிக்கும் போதும், நாம் என்னதான் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொண்டாலும் வற்புறுத்தினாலும் அவர்கள் தங்கள் விரதத்தைத் தளர்த்திக் கொள்ளமாட்டார்கள். விருந்தே நடைபெற்றாலும்கூட அங்கு வந்து பழச்சாறையோ அல்லது தயிர் சோறையோ சாப்பிடுவார்கள். பக்தியோ மூடநம்பிக்கையோ அவர்கள் தங்களுடைய நிலைப்பாட்டில் கொண்டிருக்கும் உறுதியை நம்முடைய பகுத்தறிவாளர்கள் இன இழிவை நீக்க தாங்கள் கொண்டிருக்கும் கொள்கையில் கொள்வதில்லை. நாத்திகர்கள் என்பதற்காக நாம் தீபாவளியைப் புறக்கணிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. கடவுள் நம்பிக்கை மத நம்பிக்கை என்பதற்கு அப்பாற்பட்டு சுயமரியாதையின் பொருட்டு தமிழர்கள் தீபாவளியைப் புறக்கணிக்க வேண்டும். ●

விடுதலை 14.11.2023

**யாருக்குக் கொண்டாட்டம்?**




('துக்ளக்' 22.11.2023)

திராவிடனை அசுரன் என்று இழித்து ஆரியப் பார்ப்பனர்களால் படுகொலை செய்யப்பட்ட நாளில் (தீபாவளி) திராவிடர்கள் துக்கம் கொண்டாடுவதற்குப் பதில், தன்மான இனவுணர்ச்சி எரிமலை வெடிக்க வேண்டிய நாளில் - இந்த சூத்திரர்களைக் கொண்டாட வைத்து விட்டோம் பார்த்தேளா என்பதில் இந்தப் பார்ப்பனர் களுக்குத் தான் எத்தனை ஆனந்தம்! கொண்டாட்டம்!

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian